அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 185

எனது இல.543 இ.675 டி.
தாபனப் பகுதி,
அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு-7.
1981, ஜனவரி மாதம் 08 ஆந் திகதி.

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
அரசாங்க யாக்கங்களின் தலைவர்கள் யாவர்க்கும்.

தீயினால் வரும் தீங்குகளுக்கு எதிரான போதியளவு
முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்.

அரசாங்கத் திணைக்களங்களிலும் அரசாங்க யாக்கங்களிலுமுள்ள பண்டசாலைகளைத் தீயிலிருந்து பாதுகாத்தல் என்னும் விடயம் பற்றிய 1980-02-25 ஆந் திகதியிட்ட 160 ஆம் இலக்க அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கையைப் பார்க்க.

02. அரசாங்கத் திணைக்களங்களும் அரசாங்க யாக்கங்களும் -

(அ) அரசாங்கச் சொத்தை அழிக்கக்கூடிய தீ ஏற்படும் அபாய நேர்வைக் கூடியவரை குறைப்பதற்கும்,

(ஆ) தீ ஏற்படுமிடத்து, அதனால் விளையும் சேதத்தைக் கூடிய வரை குறைப்பதை நோக்கமாகக் கொண்ட போதியளவு தயார் நிலையை வைத்திருப்பதற்கும்

நடவடிக்கையெடுக்க வேண்டியது அத்தியாவசியமாகும்.

03. எனவே, பந்தி 2(அ), 2(ஆ) என்பன தொடர்பான சகல விடயங்களுக்கும் பொறுப்பாக இருக்கும் பொருட்டு உங்கள் அமைச்சை/திணைக்களத்தை/அரசாங்க யாக்கத்தைச் சேர்ந்த பொறுப்புள்ள உத்தியோகத்தரொருவரைச் சாட்டி நியமிக்குக.

04. இவ் வுத்தியோகத்தர், ஒவ்வோர் அலுவலகப் பண்டசாலையும் அல்லது குதமும் சம்பந்தமாக முறையான அவசரகால நிலைமைத் திட்டவமைப்பொன்று ஒழுங்கு முறையாக வகுத்தமைக்கப்படுகின்றதென்பதையும், அத்தகையவோர் அவசர கால நிலைமையின் போது உதவியளிக்க வேண்டியவர்களான/உதவியளிக்க வேண்டியவையான சகல உத்தியோகத்தர்களுக்கும் நிறுவனங்களுக்கும் குறித்த திட்டவமைப்பு கிடைக்குமாறு செய்யப்படுகின்றதென்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். இத் திட்டவமைப்பு -

(அ) பண்டசாலைகள், பதிவேட்டு அறைகள் முதலியன போன்ற தீ ஏற்படும் அபாய நேர்வு உச்ச அளவிலுள்ள இடங்களின் இட அமைவு,

(ஆ) நெரியக்கூடிய நீண்ட நீர்க்குழாய்கள் எடுத்துச் செல்வதற்கான சுழல் பிப்பாய், தீயணைக்கும் கருவிகள் என்பன போன்ற தீயணைப்புச் சேவைகளுடனும் தொடர்பு உபகரணங்களிலும் (தொலைபேசி, தீ ஏற்பட்டுள்ளமை பற்றி எச்சரிக்கை செய்தல், அபாய அறிவிப்பொலி ஒழுங்குமுறை) இடையமை,

(இ) இவையுள்ள நிறுவனங்களின் பெயர்களும் அவற்றின் தொலைபேசி இலக்கங்களும் எடுத்துக்காட்டு;

(1) மிகக் கிட்டிய பொலிசு நிலையம்,
(11) மிகக் கிட்டிய தீயணைப்புக் கூறு,
(111) கட்டடங்களை உடைக்கும் பொருட்டுப் பெரும்பாரப் பொறியை அளிக்கக் கூடியதான மிகக் கிட்டிய வேலைத் தலம், அத்துடன்,
(1V ) தீயை அணைப்பதற்காகத் தண்ணீர் பெறக்கூடிய தண்ணீர் வளமுள்ள மிகக் கிட்டிய இடம்.

05. ஒவ்வொரு தலத்திலுமுள்ள பணியாளர்கள் யாவர்க்கும் நெறிப்படுத்துகைகள் வழங்கப்பட வேண்டுமென்பதோடு, கைகளால் இயக்கப்படும் தீயணைப்புச் சாதனத்தை உபயோகித்தல் உட்பட, எடுக்கப்பட வேண்டியவையான நடவடிக்கைகள் பற்றி அவர்கள் நன்கு தெரிந்து கொள்ளுமாறும் செய்யப்படுதல் வேண்டும்.

06. தலமொன்றிலுள்ள பணியாளர்கள் அவ்வப்போது மாற்றப்படக் கூடுமாதலால், ஓர் அவசரகால நிலைமையின் போது எடுக்கப் பெற வேண்டியவையான நடவடிக்கைகள் பற்றி இப் பணியாளர்கள் நன்கு தெரிந்து கொள்வதற்கேதுவாக, ஒரு தவணையாக நிகழ்கிற இடைநேரம் விட்டு விட்டு ஒத்திகைகள் நடத்தப்படுகின்றனவென்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமெனவுமாகும்.

0.7. தீ காரணமாக முக்கியமான ஆவணங்களுக்கு அழிவு ஏற்படக் கூடிய அபாய நேர்வைக் கூடியவரை குறைக்கும் பொருட்டு, பொருள்கள் யாவற்றினதும் கையிருப்புக்கள், வழங்கல்கள், பெறுவனவுகள் என்பன தொடர்புடையவான ஏடுகளும் பதிவேடுகளும் பாதுகாப்பான இடங்களில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

08. தீயை அணைப்பதை எளிதாக்கும் முகமாகக் குறித்த பண்டசாலையின் எல்லாப் பாகங்களுக்கும் தடையின்றி நுழைவதற்கு ஏற்பாடு செய்யும் விதத்தில் பண்டசாலையொன்றுக்குள் பொருள்கள் இட்டு வைக்கப்படுதல் வேண்டும்.

09. எரிபொருள், ஏனைய எளிதிற்றீப்பற்றும் பொருள்கள் என்பனவற்றைப் பண்டசாலையிலிட்டு வைத்தல் சம்பந்தமாக முறையான ஏம ஏற்பாடுகள் செய்யப் படுதல் வேண்டும். அத்தகைய இடங்கள் யாவற்றிலும் " புகைத்தல் ஆகாது" என்று தெரிவிக்கும் அறிவிப்புப் பலகைகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

10. புதிய பண்டசாலைகள் அமைக்கப்படும் போது தீயினால் வரும் தீங்குகளிலிருந்து பாதுகாப்பளிப்பதற்கு வேண்டிய நியாயமான பாதுகாப்புத் தேவைப்பாடுகள் யாவற்றுக்கும் அப் பண்டசாலைகளின் வடிவமைப்புக்களில் ஏற்பாடு செய்யப்படுகின்றனவென்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு அவற்றின் திட்டவமைப்பு, வடிவமைப்புக் கட்டங்களிலேயே நடவடிக்கையெடுக்கப்படுதல் வேண்டும்.

11. நடைமுறைப்படுத்தக் கூடிய விடத்து, இது தொடர்பில் தீசார் சுற்றாய்வு சோதனை, தீயணைப்பதற்குப் பதவியினரைப் பயிற்றுதல் முதலியன போன்ற விடயங்களில் மேலும் தொழினுட்ப மதியுரையைப் பெறும் பொருட்டு, கொழும்பு -10, டார்லி வீதியில் அமைந்துள்ள தீயணைப்புச் சேவைத் திணைக்களத்தின் பிரதான உத்தியோகத்தருடன் அல்லது கண்டி மாநகர தீயணைப்புப் படையின் மாநகரத் தீயணைப்புப் படை உத்தியோகத்தருடன் தொடர்பு கொள்ளுதலும் அவசியமாகும்.

12. 1980, மே மாதம் 21 ஆந் தேதியன்று அமைச்சரவை செய்த மேல்வரும் அமைச்சரவைத் தீர்மானத்தையும் கவனிக்குமாறு நீங்கள் வேண்டப்படுகிறீர்கள்:-

> " அரசாங்கக் காப்புறுதி நிதியமானது அரசாங்கத்தின் வாணிகப் பொறுப்பேற்புப் பணிகளுக்கும் கைத்தொழில் முயற்சிகளுக்கும் காப்புறுதி ஈடுகாப்புக்கு ஏற்பாடு செய்கின்றதென்பதும் அவதானிக்கப்பட்டது".

கிசி/

ஒப்பமிட்டவர்: டி. பி. ஐ. பீ. எஸ். சிறிவர்த்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.

கிசி/